முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

மூலிகைப் பண்ணை

***25785–டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூலிகைகளைப் பயிரிட்டு விற்பனை செய்யும் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மூலிகைகளைப் பயிரிட்டு விற்பனை செய்யும் நிலையங்கள் அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலே நவீன மருத்துவம் என்று சொல்லப்படுகிற அலோபதி ஒரு பக்கம் சிறப்புற்றிருந்தாலும், நம்முடைய பண்டைய மருத்துவ முறைகள் சிறப்புறக்கூடிய நிலையிலே இன்றைக்குச் சிறந்த வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக, 'நம்முடைய பார்வை நம் மீது படட்டும்' என்று நான் ஒரு கட்டுரையே எழுதினேன். நம்முடைய பெருமை நமக்கே தெரிவதில்லை என்ற வகையிலே இந்த மூலிகைகளைப்பற்றி நான் ஒரு கட்டுரையை ஒரு நாளேட்டிலே எழுதினேன். ஏனென்று சொன்னால், இந்த அவையிலே இன்றைக்கு ஒரு நல்ல செய்தி வந்திருக்கிறது. இன்றைக்கு நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த திரு. ஏ.ஆர். ரஹ்மான் அவர்கள் ஆஸ்கர் விருது பெற்றிருக்கிறார்கள் என்ற செய்தி (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2009 பிப்ரவரி 23]

நமக்கெல்லாம் தேனாக இனிக்கின்றது. அத்தகைய நிலையிலே நம்முடைய பெருமை நமக்குத் தெரிவதில்லை என்ற வகையிலே நம்மால் பயிரிடப்படுகின்ற 'நித்திய கல்யாணி' என்கின்ற 'சுடுகாட்டு மல்லிகை' என்ற மூலிகையை வெளிநாட்டுக்குக் கொண்டு சென்று, திரும்ப அவர்கள் நமக்கே விற்பனை செய்கிறார்கள். புற்று நோயைக் குணமாக்கக்கூடிய Vincristine, Vinblastine என்று சொல்லக்கூடிய மருந்துகளை அவர்கள் விற்பனை செய்கிறார்கள். அதேபோல, பால் விருத்திக்கான, இன விருத்திக்கான மூலிகைகளை நாம் பயிரிடுகிறோம். ஆனால், அவை வெளிநாட்டுக்குச் சென்று திரும்பவும் நமக்கே வருகிறது. வயாகரா என்று வருகிறபோது இங்கே மார்க்கெட் உயருகிறது. இப்படி, பல உதாரணங்களைச் சொல்லலாம். அந்த வகையில் நீர் வல்லாரை என்று சொல்லப்படுகின்ற வல்லாரை, நினைவாற்றலை அதிகமாக்குகின்ற ஓர் அற்புதமான மூலிகையாக உருவெடுத்திருக்கிறது. இப்படிப் பல்வேறு மூலிகைகள் பொருளாதார ரீதியாக நம்முடைய விவசாயிகளுக்கு உதவக்கூடியவை. இதற்காகத் தனியாக மத்திய அரசிலே ஓர் அமைப்பு இருக்கிறது. Medicinal Plant Board என்று அவர்கள் தனியாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏறக்குறைய 40 சதவீதம் மானியம் அளிக்கிறார்கள். ஆகவே, அத்தகைய மானியங்களை வாங்கிக்கொண்டு, நம்முடைய தமிழக விவசாயிகளிடையே நம்முடைய மூலிகைகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, பொருளாதார ரீதியாக வெற்றிபெறக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றபோது, அதை ஏன் தமிழக அரசு பயன்படுத்திக்கொள்ளக்கூடாது; இதற்காக வேளாண் துறை நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்த வினாவின் அடிப்படையிலேதான் தமிழகத்தில் மூலிகைப் பயிர்கள், 7,588 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 25,000 மெட்ரிக் டன் மூலிகைப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டு, வருடந்தோறும் ரூபாய் 75 கோடி வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மூலிகைப் பயிர்கள் தனியார் நிறுவனங்கள்மூலம் இத்தாலி, ஐரோப்பா, அமெரிக்கா, ஜெர்மனி,

சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதி செய்யப்படும் மூலிகைப் பயிர்கள், சென்னா என்று அழைக்கப்படும் நிலா வாரை, நித்திய கல்யாணி, செங்காந்தள் மலரின் விதை, மருந்து கூர்க்கன், துளசி, சோற்றுக் கற்றாழை, தான்றிக்காய், கடுக்காய், சர்க்கரைக் கொல்லி, கீழ்காய் நெல்லி, நெருஞ்செல்லி போன்றவை இப்போது ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பெரிய விவசாயிகள்தான் இதுபோன்ற ஏற்றுமதியை மார்க்கெட் பிடித்துச் செய்கின்றார்கள். இதை உணர்ந்துதான் தமிழக அரசு இப்போது, 2008 ஆம் ஆண்டு ஒரு முடிவு செய்தது. சிறு, குறு விவசாயிகளுக்கு மார்க்கெட் கண்டுபிடித்து, ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு இல்லாமல் இருப்பதைக் கண்டு, அவர்களுக்குச் சந்தை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், வேளாண்மை விற்பனைத் துறையும் இணைந்து, விற்பனைப் பொருட்களை வாங்கும் நிறுவனங்களைக் கண்டறிந்து இதுபோன்ற சிறு, குறு விவசாயிகளும் பயன்பெற, அவர்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புதுடெல்லியிலே இயங்குவதாகச் சொன்ன Central Medicinal Plants Board, அதாவது மத்திய மூலிகைப் பண்ணைக் கழகம் என்ற ஓர் அமைப்பு, அங்கே செயல்படுகிறது. நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் அன்புமணிதான் அதற்குத் தலைமை தாங்குகிறார். அந்தக் கழகத்திற்கு நான் சென்றிருக்கிறேன். அதிலே பல கோடி ரூபாய்க்கான மானியத் தொகையை பல வட நாட்டவர்கள் பெறுகிறார்கள். வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் இதுவரை பயன்பெற்றிருக்கிறார்கள். அத்தகைய கழகத்தினுடைய, அந்த Medicinal Plants Board–னுடைய கிளையினை நம்முடைய தமிழகத்திலே குறிப்பாக சென்னையிலே, நிறுவுவதற்கு மாநில அரசு முயற்சிக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2009 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற மூலிகைப் பயிர்களை உற்பத்தி செய்ய முன்வரக்கூடியவர்களுக்கு உதவிகளைத் தமிழகத்தில் நாம் செய்கிறோம். 75 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு ரூ.11,250/- அவர்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக 4 ஹெக்டேர் வரை இந்த மானியம் இப்பொழுதும் தமிழகத்திலே வழங்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் மூலிகைப் பயிர் சாகுபடி மற்றும் அதனைச் சார்ந்த அபிவிருத்திக்காக, 2008–2009 ஆம் ஆண்டு மற்றும் 2009–2010 ஆம் ஆண்டுகளுக்காக மத்திய அரசு சுமார் 20 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. அதன் அடிப்படையில் 1985 ஹெக்டேர் பரப்பளவில் மூலிகைப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன்.

திரு. போ. கோபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை செல்லும் வழியில் கல்லாறு என்ற இடத்தில் ஒரு பண்ணை இருக்கின்றது. அங்கே மிக அருமையான முறையில் பல்வேறு பழச் செடிகள் மூலிகைப் பயிர்கள் எல்லாம் நடப்பட்டு வருகின்றன. அரசு சார்பில் அதை மேலும் விரிவாக்க வேண்டும் என்று விரும்புகிறேன். தனியாரைவிட அரசே அதைச் சிறப்பாக நடத்த இயலுமா என்றும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலேதான் தோட்டக்கலைத் துறையின்மூலம் கல்லாறிலே அந்தப் பண்ணை நடத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. அதை மேலும் விரிவுபடுத்த, சிறப்பாக நடைபெற இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. என் நன்மாறன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.